# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அரையாண்டுத் தேர்வு

## 2018 - 2019

## தமிழ்மொழி

## வளர் தமிழ் 09

சுட்டெண்:............................................................. நேரம்: 180 மணித்துளிகள்

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.**

1. ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று

அ) திருக்குறள் ☐ ஆ) மணிமேகலை ☐

இ) புறநானூறு ☐ ஈ) மகாவம்சம் ☐

2. தனக்கு நிகரற்ற இசைவாணன் எனக் கூறப்பட்டோன்.

அ) சங்கிலியன் ☐ ஆ) இராவணன் ☐

இ) சேனன் ☐ ஈ) எல்லாளன் ☐

3. கிறுகிறுத்துப்போதல் என்ற சொல்லின் பொருள்

அ) கவலை அடைதல் ☐ ஆ) தன்னை மறத்தல் ☐

இ) கை கொட்டுதல் ☐ ஈ) அழுதல் ☐

4. மாந்தன் கையாண்ட முதற் கருவி

அ) கல் ☐ ஆ) இரும்பு ☐

இ) செம்பு ☐ ஈ ) மரம் ☐

5. புதியதொருவீடு என்ற பாடலில் கரகம் ஆடுவது

அ) புயல் ☐ ஆ) நீர் ☐

இ) மண் ☐ ஈ) மலை ☐

6. பெருங்கற்காலப் பண்பாட்டின் வழிவந்த நாகரிகமுள்ள மக்கள்

அ) நாகர்சிங்களவர் ☐ ஆ) இயக்கர்ஆரியர் ☐

இ) இயக்கர்நாகர் ☐ ஈ) நாகர்ஆரியர் ☐

7. இலக்கண வகையால் சொற்கள்

அ) 6 ☐ ஆ) 4 ☐

இ) 3 ☐ ஈ) 2 ☐

8. சேக்ச்பியர் வாழ்ந்த நாடு

அ) அயர்லாந்து ☐ ஆ) உரோமானியா ☐

இ) கிரேக்கம் ☐ ஈ) பிரித்தானியா ☐

9. சூழ்ச்சி செய்து எல்லாளனைக் கொன்றவன்

அ) அசேலன் ☐ ஆ) தேவநம்பியதீசன் ☐

இ) துட்டகெமுனு ☐ ஈ) சேனன் ☐

10. தளிர் அன்ன கை என்ற உவமை அணியின் உருபு

அ) கை ☐ ஆ) தளிர் ☐

இ) அன்ன ☐ ஈ) தளிர்அன்ன ☐

11. "தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும்வகை செய்தல் வேண்டும்" எனக் கூறியவர்

அ) தனிநாயகம் அடிகள் ☐ ஆ) பாரதியார் ☐

இ) விபுலாநந்த அடிகள் ☐ ஈ ) பாவேந்தர் ☐

12. துறைபோதல் என்பது

அ) நன்றாகச் செய்தல் ☐ ஆ) தூரச்செல்லுதல் ☐

இ) முற்றும் கற்றல் ☐ ஈ ) குறை சொல்லுதல் ☐

13. சிங்களம் மட்டும் அரசமொழி என்ற சட்டத்தை எதிர்த்தவர்

அ) தனிநாயகம் அடிகள் ☐ ஆ) ஆறுமுகநாவலர் ☐

இ) சோமசுந்தரப் புலவர் ☐ ஈ) ஞானப்பிரகாசர் ☐

14. வட்டம் என்பது

அ) பொருட்பெயர் ☐ ஆ) சினைப்பெயர் ☐

இ) இடப்பெயர் ☐ ஈ) குணப்பெயர் ☐

15. அன்றைய மணிபல்லவத்தின் இன்றைய பெயர்

அ) நயினாதீவு ☐ ஆ) அனலைதீவு ☐

இ) புங்குடுதீவு ☐ ஈ) காரைதீவு ☐

16. பின்வருவனவற்றுள் வினைப்பகாச்சொல்

அ) போ ☐ ஆ) நீர் ☐

இ) கடல் ☐ ஈ) வானம் ☐

17. இடைக்கற்காலத்தை ______________ என அழைப்பர்.

அ) பழையகற்காலம் ☐ ஆ) பெருங்கற்காலம் ☐

இ) சிறியகற்காலம் ☐ ஈ) புதியகற்காலம் ☐

18. யாழ்மாவட்டத்தில் தொல்குடித்தமிழரது ஈமப்பொருட்கள் கண்டெடுக்கப்பட்ட இடம்

அ) கந்தரோடை ☐ ஆ) பொம்பரிப்பு ☐

இ) மாந்தை ☐ ஈ) கொக்காபே ☐

19. அடுக்குத்தொடருக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) செக்கச்சிவந்த ☐ ஆ) உயரஉயர ☐

இ) மடமட ☐ ஈ) அல்லும்பகலும் ☐

20. எழுதினான் என்ற வினைச்சொல்லின் இடைநிலை

அ) இன் ☐ ஆ) எழுது ☐

இ) ஆன் ☐ ஈ) ன் ☐

21. யாழ்ப்பாணத்தில் உலகத் தமிழாராய்ச்சி மாநாடு நடைபெற்ற ஆண்டு

அ) 1964 ☐ ஆ) 1983 ☐

இ) 1981 ☐ ஈ) 1974 ☐

22. இலங்கையிலிருந்து தமிழகம் முழுவதையும் ஆண்ட கடைசி மன்னன்

அ) இராசேந்திரசோழன் ☐ ஆ) இராவணன் ☐

இ) எல்லாளன் ☐ ஈ ) இராசராசசோழன் ☐

23. பார்த்தனன் என்ற சொல்லின் சந்தி

அ) அன் ☐ ஆ) பார் ☐

இ) த் ☐ ஈ) னன் ☐

24. பொற்றாமரை என்ற சொல்லைப் பிரித்தெழுதினால்

அ) பொன் + தாமரை ☐ ஆ) பொற் + றாமரை ☐

இ) பொன்த் + தாமரை ☐ ஈ ) பொற் + தாமரை ☐

25. இலங்கையின் வடபகுதி நாகதீபம் எனக் கூறிய காப்பியம்

அ) சிலப்பதிகாரம் ☐ ஆ) வளையாபதி ☐

இ) சீவகசிந்தாமணி ☐ ஈ) மணிமேகலை ☐

26. வீடு + முற்றம் என்பதைச் சேர்த்து எழுதினால்

அ) வீட்டுமுற்றம் ☐ ஆ) வீடுமுற்றம் ☐

இ) வீட்டும்முற்றம் ☐ ஈ) வீடும்முற்றம் ☐

27. பின்வருவனவற்றுள் ஆண்பால் விகுதி

அ) ஆன் ☐ ஆ) ஆள் ☐

இ) அ ☐ ஈ) ன் ☐

28· சிங்கள மொழியின் மூலமொழி

அ) பாளி ☐ ஆ) இலத்தீன் ☐

இ) எலு ☐ ஈ) மலையாளம் ☐

29. பயித்தங்காய் என்ற பேச்சு வழக்குச் சொல்லை செவ்வழக்காக மாற்றி எழுதினால்

அ) பயிற்றங்காய் ☐ ஆ) பயற்றங்காய் ☐

இ) பைற்றங்காய் ☐ ஈ) பயிற்தங்காய் ☐

30. முல்லைச்சிரிப்பு என்ற உவமையணியின் உவமானம்

அ) முல்லை ☐ ஆ) சிரிப்பு ☐

இ) வெள்ளை ☐ ஈ) போன்ற ☐

புள்ளிகள் 30

2) **பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுவிடை தருக.**

முத்திரை சேகரித்தல் நல்லதொரு பொழுதுபோக்காகும். அத்துடன் அறிவு வளர்ச்சிக்கும் பெருந்துணைபுரிகிறது. அஞ்சல் போக்குவரத்திற்குப் பயன்படுத்திய முத்திரைகளே இவ்வாறு சேர்க்கப்படுகின்றன. பண்டைக்காலத்திலே அஞ்சல் திருமுகம் என அழைக்கப்பட்டது. அரசர் திருமுகத்தை ஓலையில் எழுதுவித்துச் சுருட்டி அதில் அரச முத்திரையைப் பொறித்து, தூதுவர் மூலம் அனுப்பி வைப்பர். ஒரு நாட்டின் மேம்பாட்டு நிகழ்வுகளையும் வரலாற்று நிகழ்வுகளையும் நினைவுபடுத்துவதற்காகப் புதிய முத்திரைகள் வெளியிடப்படுகின்றன. அச்சிட்டமுத்திரையைப் பயன்படுத்தும் வழக்கம் பிரித்தானிய அரசால் 1840 ஆம் ஆண்டு முதன்முதலாகக் கொண்டுவரப்பட்டது. இன்று எல்லாநாடுகளின் அரசு தொடர்பான ஆவணங்களிலும் மக்களின் பல தேவைகளிலும் முத்திரைகள் முதலிடத்தைப் பெற்றுள்ளன. வெளிநாட்டு முத்திரைகள், மிகப்பழைய முத்திரைகள், ஆகியவற்றைச் சேர்ப்பது சிறப்பானது. நாம் முத்திரை சேர்ப்பதனால் அரசியல், வரலாறு, கண்டுபிடிப்புகள், புகழ்வாய்ந்த பெரியோர்கள் தொடர்பான அறிவைப் பெற்றுக்கொள்ளலாம்

1. முத்திரைகளைப் பயன்படுத்தும் வழக்கம் எங்கே முதன்முதலில் தொடங்கப்பட்டது?

____________________________________________

____________________________________________

2. எவ்வகை முத்திரைகளைச் சேர்ப்பது சிறப்பானது?

____________________________________________

____________________________________________

3. நாம் முத்திரை சேர்ப்பதனால் எவை தொடர்பான அறிவைப் பெற்றுக்கொள்ளலாம்?

___

___

4. எதற்காகப் புதிய முத்திரைகள் வெளியிடப்படுகின்றன?

___

___

5. பண்டைக்காலத்தில் அஞ்சல் எவ்வாறு அழைக்கப்பட்டது?

___

___

புள்ளிகள் 10

**3) பாடநூல் வினா ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. உலகின் பல பல்கலைக்கழகங்களில் தமிழ் கற்பிக்கப்படுவதற்குக் காரணமானவர் யார்?

___

2. மகாவம்சம் தனக்குள் தானே முரண்படும் இரண்டு நிகழ்வுகளைத் தருக.

___

___

3. பெருங்கற்காலத்தில் வாழ்ந்த மக்களின் தொழில்கள் இரண்டைத் தருக.

___

___

4. புத்தர் தோற்றுவித்த ஐந்து அறங்களும் எவை?

___

___

5. பன்மொழிப்புலமை என்றால் என்ன?

___

6. மார்பில் அம்பு தாங்கி வீழ்ந்துகிடக்கும் மகனைத் தாய் என்ன சொல்லி வாழ்த்துகிறாள்?

___

___

7. இலங்கை என்ற பெயரைச் சிறிலங்கா என எந்த இனத்தவரால் மாற்றப்பட்டது? இது எத்தனையாம் நூற்றாண்டில் மாற்றப்பட்டது?

___

___

| புள்ளிகள் 10 |
|---|

4) **தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக எழுதி, கவிதையை முழுமையாக்குக.**

## தாயின் ஏக்கம்

| | | | | |
|---|---|---|---|---|
| காண்பாள் | வீடு | ஒளிரும் | மலைமீது | எண்ணி |

*தேயிலைத்தோட்டத் தொழிற் பெண்ணாள்*
*செல்ல மகனை வீட்டில் விட்டு*
*பாய்ந்து ________________ ஏறிடுவாள்- தன்*
*பாலகன் நினைவே மனம் நிறைப்பாள்!*

செடியில் ________________ பனி முத்தம்
செல்வனின் கண்ணீர்த் திரைகாட்டும்!
வடிவுச்சிலையைத் தனித்துவிட்டு
வந்ததை ______________ மனம் நோவாள்!

செழித்து வளர்ந்த இளந்தண்டில்
சின்னவன் செங்கை விரல் ______________
தளிர்கள் காற்றில் அசைந்தாடும்!
தன் மகனை மனத்தில் நினைத்திடுவாள்!

மாலைப்பொழுதின் தூரம் எண்ணி
மயங்கிச் சோர்வாள்; தேறிடுவாள்!
வேலைமுடிந்து ________________ நோக்கி
விரைவாள்; நடப்பாள்; பறப்பாள் !

புள்ளிகள் 10

**5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.**

1. பின்வரும் சொற்களைப் பகுத்து எழுதுக.

தமிழர் ____________________

கண்டான் ____________________

2. மூவிட வினைமுற்றுகளையும் தருக.

____________________

____________________

____________________

3. தரப்பட்டுள்ள சொற்களின் புணர்ச்சி வகைகளை எழுதுக.

பொற்சிலை ____________________

மண்மேடு ____________________

குழலினிமை ____________________

நீலவானம் ____________________

வாற்படை ____________________

வாழைப்பூ ____________________

4. கீழுள்ள சொற்களின் பொருள் விளங்குமாறு சொல்லியங்கள் எழுதுக.

வணிகம் ____________________

____________________

வைகறை ____________________

____________________

ஈமத்தாழி ____________________

____________________

5. பின்வரும் மரபுத்தொடர்கள் எவ்வகையின எனக் கண்டறிந்து எழுதுக.

முணு முணு ____________________

சுடச்சுட ____________________

பென்னம்பெரிய ____________________

நடையுடை ____________________

தன்னந்தனியே ____________________

சூதுவாது ____________________

புள்ளிகள் 15

6. **பந்தியை வாழிடமொழியில் மாற்றி எழுதுக.**

உலகில் பல மொழிகள் பேசப்படுகின்றன. அவை தமிழ், ஆங்கிலம், பிரெஞ்சு போன்றனவாகும். தமிழரது தாய்மொழி தமிழ். தமிழீழமும் தமிழகமும் அவர்களது தாய்நிலங்கள். அண்மையில் இலங்கையில் நடந்த போரினால் தமிழர் உலகெங்கும் பரந்து வாழ்கின்றனர். இன்று தமிழர் தங்கள் தாய்மொழியுடன் பலமொழிகள் பேசுகின்றவர்களாக உள்ளனர். இது எமக்குப் பெருமையாகும். ஆனால், நாம் எங்கு வாழ்ந்தாலும் எமக்கு என்று ஒரு நாடு இல்லையே!

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

புள்ளிகள் 05

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து, 175 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

*** மீண்டும்தொடங்கும் மிடுக்கு**

*** நட்பு**

- *நட்பு என்றால் என்ன?*
- *நட்புப்பற்றி வள்ளுவர் கூறியவை.*
- *நட்புக் கொள்வதால் உண்டாகும் நன்மைகள்*
- *தீய நட்பினால் ஏற்படும் விளைவுகள்.*

*** காலைக்காட்சி**

புள்ளிகள் 20